போலீஸாருக்கு வீடுகள் (தென் ஆற்காடு)

* 637 கேள்வி.—திரு. சீ. சிவசுப்ரமணியன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லாவில் போலீஸாருக்கு என்று 1963–64-ல் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை ?

(இ) அதற்கான செலவு என்ன ?

(உ) மேலும் எத்தனை வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1963–64-ல் போலீஸ் பணியாளருக்காக தென் ஆற்காடு மாவட்டத்தில் குடியிருப்பு விடுதி எதுவும் கட்டப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) தென் ஆற்காடு மாவட்டத்தில் தற்போது பதினொன்கு குடியிருப்பு விடுதிகள் கட்டப்பட்டுவருகின்றன. மேற்கொண்டும் ஏழு விடுதிகள் கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

மழையின் காரணமாக பயிர்ச் சேதம்

* 638 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்த பெரும் மழையின் காரணமாக ஆறுகள், கால்வாய்கள் முதலியன உடைப்பு எடுத்து அறுவடைக்கு தயாராய் இருந்த சம்பா கதிர் முதலிய பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(இ) அப்படியானால் சர்க்கார் எடுத்துள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆமாம்.

(இ) தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகியகால நெல் பயிர் செய்வதற்காக ஏக்கருக்கு ரூ. 75 வீதம் உடனடிக் கடன் வசதி அரசாங்கம் அளித்துள்ளது. நிலவரியும் வஜா செய்வதற்கு லாயக்கான நிலங்களுக்கு வஜா செய்யப்படும். வருங்காலத்தில் இம்மாதிரி வரும் வெள்ளப் பெருக்கையும் அதன்மூலம் ஏற்படும் நஷ்டத்தையும் தவிர்க்க தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா ஆறுகள், வடிகால்கள் குறித்து விரிவான ஆய்வு வேலைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. மதியழகன் : தஞ்சை மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள அந்த வடிகால் திட்டத்தின் வேலைகள் துவங்கப்பட்டனவா ? அது எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று கூற முடியுமா ?

22nd July 1964]

கனம் திரு. வெ. ராமையா : இவ்வளவு சுலபமாக அந்த வேலை நடக்குமானால் கஷ்டமே இல்லை. தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கே அது ஒரு பெரிய பிரச்னை. நூற்றுக் கணக்கான வருஷங்கள் அந்தப் பிரச்னை முறையாகக் கவனிக்கப் படாமல் இருந்த காரணத்தால் பெரிய சேதங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது அரசாங்கம் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்துகிறது. நேற்றையத்தினம்கூட, அமெரிக்காவிலிருந்து வந்திருந்த நிபுணர்கள் அரசாங்கத்தோடு பேசிவிட்டு, ஐந்து தினங்கள் அந்த ஜில்லாவில் சுற்றிப் பார்த்துவர போயிருக்கிறார்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்கள் திரும்புவார்கள். இது மிகப் பெரிய பிரச்னையாக இருப்பதால், எந்த வேலையை எடுத்தாலும் மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதற்குவேண்டிய இன்வெஸ்டிகேஷன் எல்லாம் நம்முடைய ராஜ்ய நிபுணர்கள் ஆராய்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதோடு வெளிநாட்டவர்களுடைய ஆலோசனையையும் கேட்டு ஒரு பெரிய திட்டமாக உருவாக்கவேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படுவது ஒருபுறமிருக்க, அதற்கு முன்னால் அவசரமாகக் கவனிக்கப்படவேண்டியதும் இருக்கிறது. ஆறுகள், கால்வாய்களினுடைய கரைகள் உயரம் போதாமல் இருக்கின்றன. மழை பெய்தவுடன் உடைப்பு ஏற்பட்டுவிடுகிறது. கரைகளை உயர்த்திக் கட்ட அரசாங்கம் விசேஷமான அக்கறை எடுத்துக்கொள்ளுமா?

கனம் திரு. வெ. ராமையா : உடனுக்குடன் செய்ய வேண்டிய மராமத்து வேலைகள், இந்தத் திட்டங்கள் உருவாகி நடைபெறும் வரைக்கும் காத்திருக்காமல், எதை எதை எவ்வப்போது செய்ய வேண்டுமோ அதை மராமத்து இலாகா செய்யும் என்று சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய இன்ஜினியர்கள் இந்த வடிகால் திட்டத்தைப்பற்றி விரிவான ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தோம். அதற்குமேல் செயல் திட்டம் உருவாக்கும் விஷயத்தில் அவர்களைச் சர்க்கார் விரைவு படுத்துமா ?

கனம் திரு. வெ. ராமையா : முதலில் அவர்கள் பரிசீலனை செய்து திட்டம் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பெரும் பிரச்னையை அணுகும்போது, ஆரம்பத்தில் இருந்த கஷ்டங்களை விட இப்பொழுது அதில் இருக்கும் கஷ்டங்கள் இன்னும் அதிகமாகத் தெரியும் காரணத்தால், இன்னும் திருப்தி தரக்கூடிய முறையில் அமையவேண்டும் என்பதற்காக எல்லா முயற்சிகளும் நாம் எடுத்துக்கொள்கிறோம்.

* 639 கேள்வி.—திரு. மா. இராசாங்கம் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெரியகுளம் தாலுகா, எரசக்கநாயக்கனூர் கிராமத்தில் வெள்ளத்தால் வேளாண்மைக்கு சேதம் ஏற்பட்டுள்ளது எவ்வளவு ?